திருப்பாதிரிப்புலியூர் பெரியநாயகியம்மன்

நவரத்தினம்

(வண்டிப்பாளையம், தொ. ஆ. குமாரசுவாமி அவர்களால்
125 ஆண்டுகளுக்குமுன் எழுதி வெளியிடப்பெற்றது)



பதிப்பாசிரியர்
சித்தாந்த ரத்தினம், இலக்கியச் செம்மல், நல்லாசிரியர்
புலவர் **வ. ஞானப்பிரகாசம்**. பி.லிட்., பி.எட்.,
43, சிங்காரவேல் நகர், கடலூர் - 607 004 ☎ 223214

வெளியீடு
திருப்பாதிரிப்புலியூர் சித்தாந்தச் சைவநெறி மன்றம்
கடலூர் - 607 002. 13—12—2003

பதிப்புரை

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு ஞானியாரடிகள் (ஐந்தாம்பட்டம்) 1917-ல் தொகுத்துத் தந்தருளிய திருப்பாதிரிப்புலியூர்த் தோத்திரக் கொத்து என்ற நூலை 2002 சனவரியில் உரையோடு பதிப்பிக்கும் பேறு பெற்றேன். அதன் முன்னுரையில் திருப் பாதிரிப்புலியூரைப் பற்றிய பல நூல்கள் இன்று கிடைக்கப் பெறவில்லை, பெரியோர்கள் தேடிப்பார்த்து ஏதேனும் கிடைத்தால் எளியேனிடம் தந்துதவுங்கள் என வேண்டி யிருந்தேன்.

10.8.2003 இல் என் இல்லத்தில் திருமுறை முற்றோதல் நிகழ்ந்த போது, என் ஆசிரியப்பெருந்தகை புலவர் ந. கருணா நந்தம் ஐயா அவர்கள், "திருப்பாதிரிப்புலியூர் பெரியநாயகி யம்மன் நவரத்தினம்" என்ற நூலை என்னிடம் வழங்கினார் கள் மகிழ்வோடு பெற்று, தக்க நேரத்தில் பதிப்பிப்பேன் என உறுதி கூறினேன்.

வழங்கியவர்களே வானுலகு அடைந்துவிட்ட இந்நிலையில், அவர்களுக்குச் செய்யும் அஞ்சலியாக இந்நூலைப் பதிப்பிக்க விரும்பினேன் அன்பர்கள் பலரும் பொருளுதவி தந்து என் பணியை ஊக்கப்படுத்தினர். அதன் விளைவே தங்கள் கையில் உள்ள இந்நூல்.

இந்நூல். வண்டிப்பாளையம். தொ ஆ. குமாரசுவாமி முதலியாரால் இயற்றப்பட்டு, திருப்பாதிரிப்புலியூர் இயற் றமிழாசிரியர். க.ரா. சிவசிதம்பர முதலியார் அவர்களால் பார்வையிடப்பட்டு புதுவை க. இரத்தின முதலியாரவர்கள் அச்சுக் கூடத்தில் வெகுதானிய வருடம் ஆவணிமாதம் பதிப்பிக்கபபட்டதாக முகப்புப் பக்கத்தால் அறிகிறோம்.

அதாவது 125 ஆண்டுகளுக்குமுன் (1878) இந்நூல் பதிப்பிக்கப்பட்டதாக அறிகிறோம்.

நூலாசிரியர் தொ.ஆ குமாரசுவாமி முதலியார் என்பவர் கறையேறவிட்ட நகர் கந்தபக்த சபைத் தலைவர் மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீ வா. இராசப்ப முதலியார் அவர்களின் மணாக்கருள் ஒருவர் எனவும் முகப்பு பக்கத்தால் அறிகிறோம். இவர் செங்குந்த

மரபினர். என உள்ளே அமைந்த சிவகுருநாதரின் சாற்றுக் கவியால் அறியப்பெறுகிறோம் இவரும் சிறந்த முருக பக்தர் என்பதும், கனவிலே முருகரின் காட்சி பெற்றதோடு வேலும் ஏடும் வழங்கப் பெற்றவர் என்பதும் வழிபடு கடவுள் வணக்கப் பாடலால் அறியப்பெறுகிறோம். நூலாசிரியரைப் பற்றி வேறு ஒன்றும் தெரியவில்லை.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரரின் மாணவர் சிவசிதம்பரர், அவரது மாணவர் இராசப்பர். இராசப்பர் மாணவர் குமார சுவாமி. இது ஆசிரியர் மாணவர் மரபு.

இனி நூலைப் பற்றிய செய்தி: திருப்பாதிரிப்புலியூர் பெரிய நாயகி அம்மன் மீது போற்றிப் பாடப் பெற்ற ஒன்பது பாடல்கள் கொண்டது என்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. ஒவ்வொரு பாடலும் பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும். ஏற்புடைக் கடவுள் விநாயகர் காப்பு ஒன்றும் வழிபடுகடவுள் வணக்கமாக முருகர் அருள் வேட்டல் பாடல் ஒன்றும் நூலுக்கு முன்னே அமைந்துள்ளன. ஒன்பது பாடல்களிலும்.

''கன்னிவனம் வாழ்
பிரிய அன்பர்கள் தம்மை உரியர் என்று அருள் மும்மை
பெரிய நாயகி அம்மையே''

என்பது மகுடமாக அமைந்துள்ளது.

உமையம்மை கன்னியாகி, கன்னியர் எழுவர் துணையாக சூழ அருந்தவ நாயகியாக இங்கு எழுந்தருளி பாடலேசரை வழிபட்டு அருவநிலையில் தவம் புரிந்து அருள் பெற்றமையால், இவ்வூர் ''கன்னிவனம்'' எனப் பெயர் பெறுகிறது. இங்கு அன்னை பெரிய நாயகி என்ற பெயரோடு–அம்மை (சென்ற பிறப்பு), இம்மை (இந்த பிறப்பு), மறுமை (அடுத்த பிறப்பு) என மும்மையிலும் அன்பர்களுக்கு அருள் செய்கின்றாள்.

எளிய மக்களும் படித்து மகிழவேண்டும் என்பதற்காகப் பாடல்களைச் சந்தி பிரித்து, குறிப்புரையும் தந்து பதிப்பித்துள்ளேன்.

நூலைக் கற்று, அன்னையைப் போற்றி அருள் பெறுவோமாக.

43. சிங்காரவேல் நகர்,
கடலூர் – 607 004
9—12—2003

அன்புடன்,
வ. ஞானப்பிரகாசம்

92/3

நூல் வெளியீட்டிற்கு உதவிய அன்பு நெஞ்சங்கள்:

புலவர் வ ஞானப்பிரகாசம், தலைவர்.
தில்லை. கோபாலகிருஷ்ணன், துணைத் தலைவர்.
செல்வி ப. புனிதவதி, துணைத் தலைவர்
பழ சாமிநாதன், செயலர்
அரசு ப. சௌக்கியநாதன், பொருளர்
ஆ சிவசண்முகம், முன்னாள் துணைத் தலைவர்
அ. மாசிலாமணி ,, ,, ,,
பேராசிரியர் செ. மா. க. வசந்தகோகிலம் முன்னாள் இணைச் செயலர்
அரசு. ப. சந்திரசேகர், ,, ,, ,,
கயிலைமணி, மு. ஆறுமுகம், முன்னாள் முற்றோதல் குழுத் தலைவர்
த. மணிமொழி, முன்னாள் மக்கள் தொடர்புக்குழுத் தலைவர்
துரை. சம்பந்தம்
மு. தண்டபாணி
அ. லெட்சுமிநாராயணன்
சி. அப்பர்சாமி
வ. ப. தணிகாசலம்
திருமதி த. அமிர்தகௌரி
உ. வை. அசோகன்
பேராசிரியர் சு. ச. அறவணன்
பேராசிரியர். அ. அர்த்தநாரி
ஏ. கோதண்டபாணி
Dr. வி கே. கணபதி
தி. வேங்கடாசலம்
கி. முத்துகொண்டல் B.P.T.
வெ. கோவிந்தசாமி
த. தட்சணாமூர்த்தி
புலவர். திருமதி கி. அலர்மேலு
பா. கோவிந்தசாமி
அ. த. இராமலிங்கம்
அ. நா. ச. அப்பாதுரை, புதுவை.

சாற்றுக்கவி

திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர்
* க. ரா. சிவசிதம்பரமுதலியார் அவர்கள் இயற்றியது

வெண்பா

[1]ஒண்பா திரிப்புலியூ ருட்பெரிய நாயகித்தாய்
[2]தண்பாதப் போதிலன்பாற் சாத்தினான் – பண்பார்
நவமணிமா லைப்[3]பிரபந் தம்[4]நம் குமரசாமி
தவமணி[5]மா லையொழிக்கத் தான்.

---

* திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர் க.ரா. சிவசிதம்பர முதலியார் வடலூர் வள்ளற்பெருமான் காலத்தில் வாழ்ந்தவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரரின் மாணவர், தொண்டை மண்டலச் சைவவேளாளர் மரபினர். இவர் பாடலேசுரர் மீது ஒரு பதிற்றுப் பத்தந்தாதி பாடி அதனை வள்ளலாரிடம் காண்பித்துச் சில திருத்தங்களைப் பெற்றதோடு சாற்றுக்கவியும் பெற்று உள்ளார். நூல் கிடைத்துள்ளது. சாற்றுக்கவி கிடைக்க வில்லை.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களைக் கையெழுத்துப் படியிலிருந்து ஆய்வு செய்து அச்சேற்றுதற்குச் செப்பனிட்டுத் தந்தவர்.

கரையேறவிட்ட நகர்ப்புராணம் பாடியுள்ளார். மேலும் பெரியநாயகி மாலை, திருப்பாதிரிப்புலியூர் இரட்டை மணி மாலை, பாடலேசுவரர் ஆசிரிய விருத்தம், பெரியநாயகி ஆசிரிய விருத்தம் ஆகியவை செய்து மகாவித்துவானிடம் சிறப்புப் பாயிரங்கள் பெற்றுள்ளார். இவை நான்கும் இப்போது கிடைக்கவில்லை.

இவர் 1894 க்கும் முன்பு இறந்து விட்டதாகத் தெரிகிறது.

1. ஒளி, (புகழ் பொருந்திய) 2. குளிர்ந்த திருவடி மலரில், 3. சிற்றிலக்கியம், 4. நம் குமரசாமியாகிய தவமணி, 5. மயக்கத்தை.

[1]கும்பகோணம் பழனிமுத்தையர் குமாரர் சிவகுருநாத அய்யர் அவர்கள் இயற்றியது

ஆசிரிய விருத்தம்

அகில வுலகத்(து) உயிர்க்கெல்லா
அருளைப் புகட்டி ஆண்டுகொளும்
அன்னை, அப்பர்க் கரையேற்றும்
ஐயன்இடப் பாகத்(து) உறைவாள்,
[2]மகரத்(து) அளிகள் அளைந்து செந்தேன்
வாயிற் பருகு பாதிரிப்பூ
[3]மணங்கால் [4]கன்னிவனக் கிழத்தி,
[5]வனசமலர்த் தாள்[6]புணை பிடித்தே
புகலற்(கு) அரியதுயர்ச் செய்யும்
புன்மைப் பிறவிக்கடல் கடப்பான்
பொருந்து [7]நாற்சொல் மலரால்[8]ஏர்
பூண்ட [9]ஒன்பான் மணித்தாரை
[10]பகரற்(கு) அருஞ்சீர் [11]வண்டிநகர்ப்
[12]பயில் செங்குந்தர் மரபுதித்த
[13]பானு குமரசாமி எனும்
பண்பன் [14]அணிந்தான் [15]பாவலரே.

---

1. பழனி முத்தையர், சிவகுருநாத அய்யர் ஆகிய வர்கள் வீரசைவ மரபில் அய்யர் எனப்படுவோராக இருக்கலாம். 2. மகரந்தப் பொடியில் வண்டுகள் குடைந்து 3. மணம் வெளிப்படுகின்ற, 4. கன்னி வனத்திற்கு உரியவள், 5. தாமரை மலர் போன்ற திருவடி 6. திருவடி யாகிய தெப்பம் 7. இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்பன நான்கு; பெயர், வினை, இடை, உரி என்பனவும் நான்கு 8 அழகு பொருந்திய, 9. நவமணி மாலையை 10. சொல்லுதற்கு அரிய சிறப்பு பொருந்திய, 11. வண்டிப்பாளையம், 12. வாழ்கின்ற 13. (ஞான) சூரியனாகிய 14. அணிவித்தான் 15. பாவலரே என்பது முன்னிலை விளி.

பிறவிப் பெருங்கடல்...குறள் இங்கு நினைதற்குரியது.

உ

வெற்றிவேல் உற்ற துணை

திருப்பாதிரிப்புலியூர் பெரியநாயகியம்மன் நவரத்தினம்

விநாயகர் காப்பு

விருத்தம்

அகிலமெலாம் பெற்றருளும் அரிய தாயை,
[1]ஆரணத் தோ(டு)ஆகமமும் [2]பரவு வாளை,
[3]புகலரிய மெய்ஞ்ஞானத் தகைமை வாய்ந்த
புண்ணியர்தம் உளத்தினிக்கும் தேனைக்,[4]கன்மம்
அகல்வித்தே அன்பர்கள்தந் துயர்கள் போக்கி
ஆளும்நம(து) அன்னையினைப் [5]பரவு தற்கே
[6]பகலவன் முன்பனிபோலப் பாவம் யாவும்
பற்றறுக்கும் ஐங்கரனைப் பணிதல் செய்வாம்.

---

1. வேதங்களோடு, 2. போற்றப்படுபவளை, 3. சொல்லுதற்கரிய, 4. கன்மம் என்பதனால் ஆணவம், மாயை ஆகிய மற்ற மலங்களையும் கொள்ளலாம். 5. போற்றுவதற்கு 6. கதிரவனைக் கண்ட பனித்துளி இல்லாமல் போதல் போல திருவருளால் பாவங்கள் இல்லாமல் போகும்.

''பண்ணிய பாவம் எல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசிததிட,ல் வேண்டும் அன்னாய்''

என்ற பாரதி வாக்கு இங்கு ஒப்பு நோக்கற்குரியது.

வழிபடு கடவுள் வணக்கம்

ஆசிரிய விருத்தம்

[1]பொன்னுலவு பங்கயப் போதன்,[2]மால், இந்திரன்
[3]புங்கவர்கள் எவரும் நாடிப்
புனித சரவண பவ,குகா எனச்[4]சந்ததம்
போற்றிவரு [5]கந்தகிரி விட்(டு)
என்னையும்ஓர் பொருள்எனக் கருதிஇவ்வேழையற்(கு)
[6]இகபரச் செல்வம் நல்க,
இனிய செந்தமிழ்[7]கொ(டு)உன் புகழ்கூறிஅருள்பெற்ற
எழில்[8]திருப் புகழ்வேடமாய்க்
[9]கன்னல் மொழி வாய்திறந்(து) இன்னமுத மடையெழக்
கருதரிய [10]சவையின் நடுவில்
[11]கங்குல் ஒழியப்[12]பகல(து) என்ன ஒளிசெய்கின்ற
காட்சியுறு [13]பூர்ணசந்திரன்
என்னவெ சிறந்(த)அன்று என்[14]சொற்பனத்(து)உன்புலமை
எவர்க்கும் படித்து எளியன்மீது
இன்புற்று வேலும் ஏடும் தந்த குருவே!அருள்
ஈசுரிதனைப் பரவவே.

---

1. பொற்றாமரை மலரில் வசிக்கும் பிரம்மா, 2. திருமால், 3. முனிவர்கள், (தேவர்கள்) 4. எப்பொழுதும் 5. முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் மலை, 6. இம்மைக்குரிய இன்பத்தையும் மறுமைக்குரிய வீடு பேற்றையும், 7. கொண்டு என்பதன் இடைக்குறை 8. திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதர் திருவேடமுடன் 9. கரும்பு போன்ற இனியமொழி பேசும், 10. அவை (சபை) 11. இரவுக்குரிய இருள் நீங்க 12. ஒளி செய்யும் பகலைப் போன்று 13. முழுநிலவு (பௌர்ணமி) 14. கனவில் 15. உன்னால் பெற்ற புலமையை எவர்க்கும் படிக்க.

பதிகங்கள்

[1]ஏர்மருவு பங்கயப் போ(து)உளம் மருண்டு தன்
[2]ஏற்ற அத்தங்கள் கூப்பி
இனியநின்[3]வதன சுந்தரமதை மனம் கொண்டு
இளைத்து வாடுறும் எ நாளும்;
[4]கார்மருவும் இந்துநின்[5] நுதலினைக் கண்டுதன்
கைகூப்பி வந்திக்குமே;
காணரிய [6]இந்திரதனு(சு)அகம்நாணி நின்னுதல்
காட்சி கண்(டு) உடன் மறையுறும்;
[7]கூர்மருவு நயன நல்விலாசந் தனைக்கண்டு
குவளைமலர் பணிகள் புரியும்;
கொஞ்சு குயில் மதலைநின் [9]கொவ்வை
வாய்ச் சொற்குக்
[10]குதூகலித்திடும், என்னில், நான்
[11]பேர்மருவு நின்சீரினைத் தெரிந்(து) எவ்வணம்
பேசுவேன்? கன்னிவனம் வாழ்
பிரிய அன்பர் கள்தம்மை உரியர் என்று அருள் மும்மை
பெரியநாயகி அம்மையே. (1)

---

1. அழகிய தாமரைப்பூ 2. வணங்குதற்குத் தகுந்த கைகள் 3. முகஅழகை 4. மேகங்களின் நடுவே விளங்கும் சந்திரன், 5. நெற்றி, 6. இந்திர வில், 7. கூரிய கண் அழகு 8. கொஞ்சும் குயில் குஞ்சு. 9. கொவ்வைக் கனி போன்ற வாயிலிருந்து வெளிப்படும் சொற்களுக்கு. 10. அகமகிழ்ந்திடும் 11 பெருமை பொருந்திய, (தாமரையை முகத்திற்கும், பிறைச் சந்திரனை நெற்றிக்கும், இந்திரவில்லையும் நெற்றிக்கும் குவளை மலர்களைக் கண்களுக்கும், குயில் மொழியை வாய்ச்சொற்கும் உவமை சொல்லுதல் மரபு. ஆனால் அன்னையின் உறுப்புகளின் முன் அவையெல்லாம் உவமையாக முடியாமல் நாணுகின்றன.

[1]அஞ்(சு) அக்கரக் கடவுள்[2]ஆஞ்ஞை தனில்நிற்கின்ற
[3]அயனும் இவ்ஆன்ம கோடி
அனைத்தையும் [4]அமைப்பன்; [5]ஒருரட்சகன் எனப்
பெயர்கொள் அரிய திருமாலும் இதனைச்
[6]சஞ்சலமு றாது இரட்சிப்பன்; நம் சிவபிரான்
[7]சங்கரித்திடு தொழிலொடும்
[8]தாரணியில் அன்பர்க்கு இரங்கியே [9]சிருட்டி[10]திதி
தம்மையுங் கொண்டுசீரார்
[11]கஞ்ச மலர் அயன் வகுத்திட்ட உலகுக்கெலாம்
[12]காரணத் தவராகியும்
காணரிய அம்மை நீ இல்லையெனில் [13]இப்புவிக்
கண்மூன்று தொழில் இராதால்;
[14]பிஞ்ஞகன் முதல் மூவர் யாவர்க்கும் முதல்வியே!
பெருமைதிகழ் கன்னிவனம் வாழ்
பிரியஅன்பர்கள் தம்மை உரியர் என்று அருள் மும்மை
பெரிய நாயகி அம்மையே. (2)

---

1. நமசிவாய என்ற மந்திரத்திற்குரிய சிவபெருமான். 2. அருளாணையின்படி 3. பிரமாவும், 4. படைப்பன் 5. ஒப்பற்ற காத்தற் கடவுள், 6 வருத்தம் அடையாமல் 7. அழித்தல் தொழிலொடும், 8. உலகில் 9. படைத்தல், 10. காத்தல், 11. தாமரை மலர், 12. முதற்காரணப் பொருளாகியும் 13. இவ்வுலகில், 14. சிவபெருமான்

[1]ஆறு சமயத்(து) [2]இருவர் பேதாதி பேதமாய்
அளவிலாப் பிரிவு செய்தே
அன்போடும் என் தெய்வம் உன் தெய்வம் என்(று) உன்னை
அண்டியே, குறைகள் முற்றுங்
கூறி, முறையிட்டு நின்(று), ஆனந்த முற்று,வாய்
குழற நின் பெருமை தனையே
கோடானு கோடியாய் [3]உன்னுவார்; அதிலும்
குறிப்பொடு [4]வரப்பிலா நின்
[5]தேறு புகழ்வெள்ளத்தின் ஒரு [6]திவலையும் உறா;
சிறியேன் உறுந் துயர்களோ
செப்பிடற்(கு), [7]உற்ற வாய் ஆயிரம் கொளும் ஆதி
சேடற்கும் அளவுறாவால்;
பேறுபெற மெய்யன்பர் என்றும் வந்து ஏத்திடும்
[8]பெருமைசெறி கன்னிவனம் வாழ்
பிரிய அன்பர்கள் தம்மையும் உரியர் என்று அருள்மும்மை
பெரியநாயகி அம்மையே. (3)

---

1. சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் 2. வேதாந்தச் சைவர், சித்தாந்தச் சைவர். 3. நினைப்பவர் (கோடானு கோடியாய் நினைப்பினும் நின்புகழ் வெள்ளத்தில் ஒரு துளியும் ஆகாது.) 4. அளவிலா 5. தெளிவான புகழ் 6. துளியும் 7. ஆயிரம் வாய்களையுடைய ஆதிசேடனாகிய பாம்புக்கும் (என் துயர்களைச் சொல்லி முடியாது) 8. பெருமை நிறைந்த

[1]வாதைசேர் [2]லோகா பிமானந்தனில் முழ்கி,
வறிஞனாய் [3]மடவார்களின்
[4]மையல் எனும்ஓர் பெரிய[5]வாரியில் அழுந்தி, என்
மனந்தன்னையும் கெடுத்தே,
ஏதும் அறியாப் பெரும் [6]பேயனைப் போலவே
ஏங்கித், தளர்ந்து, என்னிடம்
[7]இணையிலா அறிவினைப் பறிகொடுத்தே, என்றும்
ஈவொடும் இரக்கமின்றி
[8]நீதம் இது[9]அநீதம் என்று உணர அறியாதவன்,
[10]நீதரை அடுத்(து) எநாளும்
[11]நின்தொண்டு புரியாதவர்த் தொண்டு இயற்றும்இந்
நேர்மையை நினைக்கில் பெரும்
[12]பேதையிற் பேதமைஇ(து) அல்லவோ? [13]அம்மணி!
பெரிதருள்செய்; கன்னிவனம் வாழ்
பிரிய அன்பர்கள் தம்மை உரியர் என்(று) அருள்மும்மை
பெரிய நாயகி அம்மையே. (4)

---

1. *துன்பம்,* 2. *உலகப்பற்று,* 3. *பெண்களின்,* 4. *மயக்கம்* 5 *கடலில்,* 6. *பேய் பிடித்தவன்* 7. *ஒப்பிலாத,* 8. *நீதி* 9. *அநீதி* 10. *நீசர்* (இழிந்தவர்) 11. *நினக்குத் தொண்டு செய்யாதவர்கட்குத் தொண்டு செய்யும் இவ் இயல்பினை* 12. *அறியாமையிலும் பெரிய அறியாமை* 13. *அம்மையே.* (விளி)

[1]பாடிப் படித்(து) உனைப் போற்ற இயலாத [2]புன்
பல்பிறவி போக, இந்தப்
[3]பகர்அரிய மானிடப் பிறவி வாய்த்தும் உனைப்
பாடி [4]உய்யா(து), உன் அருளைத்
தேடித் தவம்புரியும் மெய்யடியர் தங்கள் பணி
செய்யாது, [5]நிந்தை பேசித்
திரியும் இவ்ஏழையேன் நின(து)அருள் அடைந்(து) என்று
செம்மை யுற்றிடுவன் அம்மா?
[6]நாடிநன் மார்க்கம் இல்லாப் [7]புல்லர் தம்மையே
[8]நவில்இலவு காத்த கிளி போல்
[9]நத்தி, ஒரு பயனும் இல்லாமலே வீண்பொழுது
நனிபோக்கி மிக வறுமையும்
பிடித்து [10]மெத்தக்கலங்கினேன், [11]அருள்புரிவை;
[12]பேசரிய கன்னி வனம் வாழ்
பிரிய அன்பர்கள் தம்மை உரியர் என்று அருள் மும்மை
பெரிய நாயகி அம்மையே. (5)

---

1. நின் புகழ்ப்பாக்களைப் பாடியும், நின் புகழ் நூல்களைப் படித்தும், 2. மனிதப் பிறவியினும் இழிவான 3. இந்த மனிதப் பிறவியின் பெருமையைச் சொல்லி முடியாத அவ்வளவு பெருமையுடைய, 4. கடைத் தேறாமல், 5. இகழ்ந்து பேசி 6. விரும்பி, 7. கீழ்மக்கள், 8. இலவு காத்த கிளி ஒரு பயனும் பெறாதது போல, 9. விரும்பி 10. மிக 11. அருள் செய்வாயாக, 12. சொல்ல இயலாத அவ்வளவு பெருமை வாய்ந்த

''வாய்த்தது நந்தமக்கு ஈதோர்பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசுபதம் அருள்செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரம் தீவளைத்தான் தில்லையம்பலத்துக்
கூத்தனுக்(கு) ஆட்பட்டிருப்பதன்றோ நம்தம்
கூழைமையே''

என்ற அப்பரடிகள் வாக்கு இங்கு நினைதற்குரியது.

பத்தியொடு நின்பதம் வழுத்தும் நின்அன்பரைப்
[1]பரிவொடும் வணங்கி, அவர்தாள்
பற்றி,[2]இருதயகமல மலர்மீ(து) இருத்தியே
[3]பரவா [4]உலுத்தர் [5]தம்பால்
[6]சித்தம(து) இணங்கி நீ[7]திருமங்கை என்னும்ஓர்
[8]திவ்விய ரூபங் கொண்டுமே
திருவுளம் இரங்கி [9]அட்டக செல்வம்ஈவதும்
தேவியே உனை அன்பொடும்
எத்தினமும் நாடி உன(து)அன்பர்க்(கு) உவந்துதுதி
ஏற்றி இம் மானிலத்தில்
[10]இகப்பொருள் எனப்புகலும் [11]ஈவுஇரக்கத்தொடும்
[12]இலங்குபவர் தம்மை வறுமை
பெற்றிட்(டு)இருக்க வைப்பதும் [13]என்ன கருமமோ?
[14]பேசுவாய்; கன்னிவனம் வாழ்
பிரிய அன்பர்கள்தம்மை உரியர்என்(று) அருள்மும்மை
பெரிய நாயகி அம்மையே. (6)

---

1. *அன்பொடும்* 2. *இதயமாகிய தாமரை மலர் மீது*, 3. *போற்றாத*, 4. *இழிந்தவர்*, 5. *தம்மிடத்தில்*, 6 *மனம் விரும்பி*, 7 *திருமகள்* 8. *தெய்வ வடிவு*, 9. *எட்டு வகைச் செல்வங்கள் (திருமகள் எண்வகைச் செல்வங்களைத் தருதலாலேயே 'அட்டலட்சுமி' யென வணங்குகின்றோம்)* 10. *இவ்வுலகில் சிறந்த குணம் எனப் பேசப்பெறும்*, 11. *இரக்க குணம் அதனால் நிகழ்வது ஈகை*, 12. *விளங்குபவர்*, 13. *என்ன செயலோ?* 14. *எனக்கு விளங்குமாறு சொல்வாயாக.*

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். (169 *அழுக்காறாமை* 9)
என்ற திருக்குறள் இங்கு சிந்தனைக்குரியது. அறிவுடையாரால் 'இதற்கு ஏதுவாகிய பழ வினை யாது?' என்று ஆராயப்படுதலின், 'நினைக்கப்படும்' என்றார் எனப் பரிமேலழகர் விளக்கம் தந்தார்.

ஏழையேன் என்தனையும் ஈன்றும் நின்இதயம்அது
இரங்கா(து)எ நாளும் [1]இன்மை
என்றிடும் சாகரத்(து) ஆழ்த்தி இன்றளவுமெ
[2]இடுக்கங்கள் மேலா டவும்,
சூழும்[3]முன்கன்மம் [4]முற்றும் தொடர்ந்திட்(டு) எனைச்
[5]சூறையாடிடவும், எவரும்
[6]துட்டன்என என்னைப் [7]பதட்டமாய்ப் பேசியே
[8]தூஷிக்கவும், வீணிலே
பாழுக்(கு)உழைத்(து) உழைத்தே இநாள் அளவு[9]ஈனர்
பக்கல்சென்(று), அவர்தம்மையே
பற்றி,[10]உறு குற்றேவல் புரியவும் [11]வைத்தை;இது
[12]பாங்கல்ல; நீ [13]கைவிட்டால்
[14]பேழையிற் பேழையாய் இருக்கினும் [15]கூற்(று)என்உயிர்
பேதிப்பன்; கன்னிவனம் வாழ்
பிரிய அன்பர்கள் தம்மைஉரியர் என்று அருள்மும்மை
பெரிய நாயகி அம்மையே. (7)

---

1. வறுமை என்ற கடலில் 2. துன்பங்கள்
3. யான் முன் பிறப்பில் செய்த வினைகள், 4. முழுமையாக, 5. சுழல் காற்று அலைக்கழிப்பது போல் அலைக் கழிக்கவும், 6. கெட்டவன், 7. பதற்றமாய் (முன்பின் ஆராயாமல் விரைந்து) 8. தூற்றவும், 9. இழிந்தவர் 10. மிகுதியாகப் பணிவிடைகள் 11. வைத்தாய், 12. முறையன்று, 13. மேற்சொன்ன நிலைகளிலிருந்து என்னை எடுத்தாட் கொள்ளாமல் கைவிட்டால், 14. பெட்டிக்குள் பெட்டி வைத்துப் பாதுகாப்பது போல நான் பாதுகாப்பாக இருப்பினும் 15. இயமன் என் உடம்பினின்றும் உயிரை வேறுபடுத்துவன். எனவே இயமன் கைக்குள் படாமல் என்னைக் காத்தருள்க.

[1]அடுத்தவர்தமைக் கெடுத்திடும் வஞ்சன்,நின்
அன்பிலா(து) இருக்கும் வஞ்சகன்,
[2]அகமகிழ அன்பரைக் காய்ந்திடும் வஞ்சன்,நல்
அறம் ஒன்றிலாத வஞ்சன்.
[3]சடுத்தமாய்ப் பேசிப் பகைக்கும் வஞ்சன்,தனைத்
தானே புகழ்ந்த வஞ்சன்,
[4]தாரணியில் [5]ஈனரைச் சார்ந்திடும் வஞ்சன்,வெகு
[6]சற்பனைகள் புரியும் வஞ்சன்,
[7]தொடுத்த கருமந்தனை விடுக்கும் வஞ்சன்,[8]தாதை
சொலையுங் கடக்கும் வஞ்சன்,
தொல்லுலகில் மாதர்மயல்தன்னில் வீழ்வஞ்சன்,[9]குரு
தூஷணை நிகழ்த்தும் வஞ்சன்,
[10]பிடிதமாய்ப் பொய் பேசும் வஞ்சன்,யான்உன்தன்அருள்
பெற[11]அருள்வை; கன்னிவனம் வாழ்
பிரியஅன்பர்கள்தம்மை உரியர்என்று அருள்மும்மை
பெரிய நாயகி அம்மையே. (8)

வஞ்சகம் என்பது மறைந்திருந்து கெடுத்தலாகும். இப்பாடலில் மனிதனிடமுள்ள பல்வேறு வஞ்சகத் தன்மைகளைப் புலவர் தம்மீது இட்டுப் பேசுகின்றார்.


1. தம்மை அண்டியவர்களை, 2. அன்பரைக் காய்வதால் அகமகிழ்தல், 3. போட்டியாய், 4. உலகில் 5. கீழ்மக்களை, 6. பொய்ச் செயல்கள் 7. தொடங்கிய செயலைச் செய்யாது கைவிடும், 8. ''தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'' என ஆன்றோர் கூறியிருக்கவும், தட்டக் கூடாத தந்தை சொல்லையும் கேளாது தட்டிச் செல்லும், 9. ஆசிரியரை இகழ்ந்து பேசும், 10. பிடித்தமாய் (விருப்பமாய்) 11. அருள் செய்வாயாக.

அறியும் நற்குணம் ஒன்றில்லாது [1]மாறாட்டமாய்
[2]அறைந்து [3]சிந்தையையுங் கெடுத்து
அறிவினை இழந்து தாய்தந்தை முதல் எவரையும்
அகங்காரமாய்ப் பேசிடும்
[4]வெறியனைக் கற்ற பெரியோர்கள் முதலோர்களும்
[5]விதியெனக் கருதி ஒன்றும்
[6]விளம்பாது தாம்ஈன்ற மைந்தர் என [7]உன்னி ஓர்
வெறுப்புங் கொளார்கள்; அதுபோல்
சிறியேன் இலக்கண இலக்கியமும் அறியாது
[8]சிந்தையில் தோற்றுமாறு
சிந்தித்து நின்பெருமை பேசினேன்; இதை ஓங்கு
செந்தமிழ்ப் புலவர்களுமே
பிரியமாக் கொள்ளவும் [9]பேதையேன் நின்னருள்
பெறவும் அருள்; கன்னி வனம் வாழ்
பிரிய அன்பர்கள் தம்மை உரியர் என்று அருள் மும்மை
பெரிய நாயகி அம்மையே. (9)

---

1. மாறுபட்டு, 2. பேசி, 3. தன் சிந்தனையையும் கெடுத்து, பிறர் சிந்தனையையும் கெடுத்து 4. வெறிவேறு, பைத்தியம் வேறு, பிறர்க்குத் தீங்கு செய்தல் வெறித் தன்மை, 5 இந்நிலைமை அவன் தலைவிதி எனக் கருதி. 6. சொல்லாது 7. நினைத்து 8. என் சிந்தையில் தோன்றியபடி 9. அறிவில்லாதவனாகிய யான்.

உயர்ந்த செந்தமிழ்ப் புலவர்கள் பாராட்டுமாறு தன் கவிதையில் சிறப்பு இல்லையென்றாலும் அவர்கள் விரும்புமாறு அன்னை அருள வேண்டுகிறார். இது புலவரின் அடக்கத்தைக் காட்டுகின்றது.



திருப்பாதிரிப்புலியூர்
சித்தாந்தச் சைவநெறி மன்றம்
கடலூர் - 607 002.

திருப்பாதிரிப்புலியூர்ச் சித்தாந்தச் சைவநெறி மன்றம் திருப்பாதிரிப்புலியூர்ச் சந்நிதி வீதியில் அமைந்துள்ள, திருக்கோவலூராதீனம் சிவத்திரு ஞானியார் மடாலயத்தை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

சைவத்திலும், சித்தாந்தத்திலும் ஈடுபாடு கொண்ட 130 உறுப்பினர்கள் தற்போது உள்ளனர்.

ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் ஞாயிறு முற்பகல் 10 மணி முதல் 1 மணி வரை தக்க அறிஞர்களைக் கொண்டு ஆன்மீகச் சொற்பொழிவு நடத்தப்பெறுகிறது.

வாழ்வியல் நோக்கில் பன்னிரு திருமுறைகள் என்ற என்ற தலைப்பில் மாதம் ஒரு திருமுறை பேசப்பெறுகிறது.

விரும்பும் உறுப்பினர்களின் இல்லங்களில் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சி நடத்தப்பெறுகிறது.

திருப்பாதிரிப்புலியூரைச் சுற்றியமைந்த சிவாலயங்களில் உழவாரப்பணி செய்யப் பெறுகிறது.

வாய்த்தபோது உறுப்பினர்களைச் சிவத்தல யாத்திரை அழைத்துச் செல்கிறது.

விரும்பும் உறுப்பினர்கள் சிவதீக்கை பெற ஏற்பாடு செய்து தருகிறது.

இப்படிப் பல வகைகளில் செயல்பட்டு வருகின்றது.

ஆர்வமுள்ளவர்கள் மன்றத்தில் உறுப்பினராகியும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டும் பயன்பெற வேண்டுகிறோம்.

சுபம் பிரிண்டர்ஸ், சிதம்பரம். ☎ 232544